No. of Printed Pages : 8

**5761**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part I – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் **38**-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக் கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : **20**)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

**1.** எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொல் __________.

(அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல் (இ) உரிச்சொல்

**2.** வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது __________.

(அ) நிலைமொழி ஈறு நீங்கும்

(ஆ) நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்

(இ) வருமொழி முதல் கெடும்.

3. மார்கழி, தை ஆகிய இரண்டும் __________ காலத்திற்குரியன.
(அ) முன்பனி (ஆ) பின்பனி (இ) இளவேனில்

4. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது __________ .
(அ) வஞ்சித் திணை (ஆ) காஞ்சித் திணை (இ) வாகைத் திணை

5. நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி __________ வரும்.
(அ) நாற்சீராய் (ஆ) முச்சீராய் (இ) ஐஞ்சீராய்

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. வெளவால் - இச்சொல்லில் ஒளகாரம் __________ மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும்.

7. மாடு என்னும் சொல் __________ ஆகும்.

8. பருப்பு உள்ளதா? என வணிகரிடம் வினவும் வினா __________ .

9. 'மலரன்ன சேவடி' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு __________ .

10. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருதல் __________ அணி.

## பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்க. 10x1=10

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றினைச் சான்று தந்து விளக்குக.

12. உவமையை உருவகமாக மாற்றுக. - விழிக்கயல்

13. கலையரசி கட்டுரை எழுதினாள் - எதிர்மறைத் தொடராக்குக.

14. இரு பொருள் தருக - திங்கள்

15. மரபுப் பிழை நீக்கி எழுதுக.
பால் குடித்தான்.

16. பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
இன்றைய விஞ்ஞான வளர்ச்சி ஆச்சரியமூட்டுகிறது.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர் நாடி போன்றது.

18. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியை எச்சமாக்குக.
நன்றாகப் ------- (பசி) பின்னர் அளவுடன் உண்ணுதல் வேண்டும்

19. சந்திப்பிழை நீக்கி எழுதுக.
ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.

20. கீழ்க்காணும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைக்க.
பசுமரத்தாணி போல

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு விடையளிக்க. **5x2=10**

21. மொழியின் வகைகள் யாவை ?

22. ஒரு பொருட் பன் மொழியைச் சான்றுடன் விளக்குக.

23. செம்மை + மொழி - எவ்வாறு புணரும் ?

24. வைகறைக்குரிய கால அளவு யாது ?

25. அன்பின் ஐந்திணையை எழுதுக.

26. நால்வகைப் பாக்கள் யாவை ?

27. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 இல் வினா எண் 35 இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டினுக்கு** விடையளிக்க. 2x5=10

28. வெண்பாவின் இலக்கணம் யாது?

29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்
- இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**அல்லது**

பிறிது மொழிதல் அணியை விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் **அரைப்பக்க** அளவில் விடையளிக்கவும் 2x5=10

31. எம்.ஜி. இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

32. குறட்டை ஒலி கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.

33. அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

## பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

என் ஆபீசுக்கு ஒரு மெசேஜ் சொல்ல வேண்டும். என் செல்போனில் அவுட்கோயிங் போகவில்லை. பிளீஸ் உன் செல்போனைத் தா, கால் பண்ணிட்டுத் தருகிறேன்.

(ஆ) அரபு எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

57, 148, 316, 427

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Time is gold.
(2) The face is the idex of the mind.
(3) Effort never fails.
(4) Every tide has its ebb.

35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

பரிதிமாற் கலைஞர் தமிழின் மேன்மையைத் தாம் உணர்ந்ததோடு, உலகிற்கு உணர்த்துவதிலும் தலை சிறந்து விளங்கினார். யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரனார், பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு, திராவிட சாஸ்திரி என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார். பரிதிமாற் கலைஞர் தாம் இயற்றிய தனிப் பாசுரத் தொகை என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரிய நாராயன சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற் கலைஞர் எனத் தனித்தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொண்டார். இந்நூலினை, ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரின் செந்தமிழ் இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரை வரைந்தார். தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என முதன்முதலாக நிலை நாட்டினார்.

(1) சி.வை. தாமோதரனார் பரிதிமாற் கலைஞருக்கு வழங்கிய பட்டம் யாது ?
(2) பரிதிமாற் கலைஞரின் இயற்பெயர் யாது ?
(3) பரிதிமாற் கலைஞர் இயற்றிய நூலின் பெயர் என்ன ?
(4) இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார் ?
(5) உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை எந்த இதழில் வெளி வந்தது ?

[ திருப்புக

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கதிர்வேல் தனது நண்பர்களுடன் பள்ளி வளாகத்தில் உரையாடிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென ஒரு சத்தம். நண்பர்கள் அனைவரும் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினர். அங்கு ......

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் **எட்டு** வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

இயற்கை அல்லது வானம்

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்து எழுதுக. 1x5=5

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே
காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

- பாரதியார்

## பகுதி - 6

38. வித்யாதரன் என்பவர் தனது சேமிப்புக் கணக்கில் ரூ.10,000/- செலுத்துவதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை வித்யாதரனாக நினைத்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தைப் பூர்த்தி செய்க. 1x5=5

பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5

பலர் உறக்கம் வரவில்லையே என்று நூல்களை படிப்பார்கள். சிலருக்கு நூல்களைப் படித்தாலே உறக்கம் வந்து விடும். ஆனால் அந்த மாபெரும் தலைவரோ படிப்பதற்குத் தனக்கு நேரமில்லை நேரமில்லை என்று எப்போதும் கூறிக் கொண்டிருப்பார். ஆனால் பாராளுமன்றத்தில் பேசும்போது அதிகமான மேற்கோள்களைப் பயன்படுத்திப் பேசுவார்.

படிப்பதற்கு நேரமில்லை என்று கூறும் நீங்கள் எப்படி இவ்வளவு மேற்கோள்கள் காட்டுகிறீர்கள்? என்று அவரிடம் மற்றையோர் கேட்டனர். அதற்கு அவர் திருடுகிறேன் என்றார். கேட்டவர்கள் புரியாமல் வியப்புடன் அவரை நோக்கினர்.

ஒரு நாள் உறங்குவதற்கு ஐந்து மணி நேரத்தை என் உதவியாளர் எனக்கு ஒதுக்கித் தந்தால் அதில், இரண்டு மணி நேரத்தைப் படிப்பதற்காகத் திருடுகின்றேன் என்றார் அவர்.

காலத்தைப் பொன்போன்று போற்றியவர் அவர். நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராய்த் திகழ்ந்தார். அவர்தாம் நமது முதன்மையமைச்சர் நேரு.

நாமும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் நல்ல நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும்.

(1) நீங்கள் பாடப் புத்தகம் தவிரப் பிற நூல்களைப் படிப்பதுண்டா ?

(2) உண்டு என்றால் நாளொன்றுக்கு எத்தனை பக்கங்கள் படிக்கிறீர்கள் ?

(3) உங்கள் ஊரில் நூலகத்தில் நீங்கள் உறுப்பினரா ?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்கவும்.

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டுக்கு வருகிறார். தந்தை வெளியூர் சென்று இருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதனைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

(1) அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர் கொள்வாள் ?

(2) நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும் 1x10=10

(அ) நும் ஊருக்குக் குடிநீர்க் குழாய் இணைப்பு வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

அல்லது

(ஆ) தடகள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் எவையேனும் **ஒன்றினுக்குக்** குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக. 1x10=10

(அ) கணினியின் தோற்றம், வளர்ச்சி - பல்துறைப் பயன்பாடு - தேவை - அறைக்குள்ளே உலகம்.

அல்லது

(ஆ) நான் விரும்பும் கவிஞர் - பிறப்பும் இளமையும் - சமுதாயத் தொண்டு - கவிதைப் பணி - நாட்டுப்பற்று.

-o0o-